முருகப்பெருமான் துணை

**மகான் காரி நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**14.05.2024**,செவ்வாய்க்கிழமை

1. ஞான வழிகாட்டும் அரங்கா
   ஞானிகளை வணங்கி மேலேற
   தான தருமம் அவசியமென
   தயவுநெறி தந்தருளும் தேசிகா
2. தேசிகனே உன்பெருமை கூறி
   தெரிவிப்பேன் துல்லிய ஆசி
   ஆசிதனை குரோதி விடைதிங்கள்
   அறிவிப்பேன் ஏகதிகதி குசன்வாரம்
   (குரோதி வருடம் வைகாசி மாதம் முதல் நாள், 14.05.2024, செவ்வாய்க்கிழமை)
3. வாரமதில் காரி நாயனாரும்
   வழங்குவேன் உலகநலம் பெற
   பாரதமே புண்ணிய வடிவுற்று
   பாருலகை காக்கும் சக்தியாக மாற
4. மாறவே அரங்கன் இப்புவியில்
   மகானாக அவதாரமெடுத்து
   ஆறுமுகனார் வழிபாடுதனை
   அறமுடன் ஞானிகள் பூசையாக
5. ஆகவே மக்களிடை தந்து
   ஆற்றல்பட வளர்த்து வர
   மிகையாக இந்தியா முழுக்க
   மேலான அரங்கன் பேரில்
6. பேரிலே கிளை சங்கங்கள்
   பெருகி தருமம் வளர்த்து
   பேரிலே ஞானிகள் பூசையை
   பிசகின்றி செய்து வருக
7. வருகவே வருங்காலமதில்
   வையகம் முழுக்க கிளைகள்
   ஆறுமுக அரங்கன் பேரிலே
   அளவிலாப் பெருகிச் சிறந்து

8. சிறந்து சன்மார்க்க நெறி
சித்தி தரும் ஞானநெறியென
பரந்த உலக மக்களெல்லாம்
பண்பான வழிமுறைகளென ஏற்று

9. ஏற்றுக் கலந்து பின்பற்றிட
எங்கிலும் தயவுப் பெருகிட
மாற்றம் தரும நெறிகொண்ட
மக்களின் தலைமை காணும்படி

10. காணும்படி கலியுகம் தன்னில்
கந்த வேலன் வெளிப்பட
ஞானயுக மாற்றம் ஆகவே
ஞானஆட்சி ஞானிகள் ஆட்சியாக

11. ஆகவே உலகம் கண்டடைந்து
அரங்கன் வந்த அவதார
மகிமை உலகம் அறிய நேரும்
மொழிந்திட்ட துல்லிய ஆசி முற்றே

—சுபம்—